வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 10.03.2025 திங்கட்கிழமை இதழ் : 70 பக்கங்கள் : 12




# நாட்டில் அநுரவின் அலை இன்னும் குறையவில்லை

## தமிழ் அரசின் சுமந்திரன் சொல்கிறார்

- தமிழ் அரசு கொழும்பில் போட்டியிடாது
- இணைந்து போட்டியிட வாசல் திறந்துள்ளது



வவுனியா, மார்ச் 10

**நாட்டில் அநுர அலை இன்னும் குறையவில்லை. அதனைக் குறைத்து மதிப்பிட முடியாது - இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன்.**

அத்துடன், வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழ் அரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடாது என்று கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது - என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழு கூட்டம் நேற்று வவுனியாவில் தனியார் விடுதியில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, மாவட்ட பணிமனையும் திறந்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு கருத்து வெளியிட்ட சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு,

மத்திய செயல்குழுக் கூட்டத்தின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 11

# த.தே.ம. முன்னணியுடன் பசுமை இயக்கம் கூட்டு?

யாழ்ப்பாணம், மார்ச் 10

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் கூட்டணி அமைக்கவுள்ளதாக அறிய வருகின்றது.

ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைமையில் 9 கட்சிகளின் கூட்டில் இணைய பேச்சு நடத்தியது. ஆனால், அந்தப் பேச்சிலிருந்து வெளியேறிய நிலையில், தற்போது அந்தக் 11

# ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டு மக்களுடனேயே!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மார்ச் 10

ஐக்கிய மக்கள் சக்தி அனைவரையும் ஒன்றிணைத்த பயணத்தையே முன்னெடுத்து வருகிறது. ஏனைய கட்சிகளை போன்று கொழும்பில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களுக்குள் தலைவர்கள் செய்து கொள்ளும் இணக்கப்பாடுகள் எம்மிடம் இல்லை. மக்கள் மத்தியிலே எமது இணக்கப்பாடுகள் காணப்படுகின்றன என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நேற்று நடந்த சந்திப்பு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11



# இந்தியப் பிரதமர் மோடி ஏப். 4 இலங்கை வருகிறார்

கொழும்பு, மார்ச் 10

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதி உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மூலம் அறிய வருகிறது.

இரு நாள் பயணமாக இலங்கை வரும் இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, 11

# இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் பாதிக்கப்பட்டோரின் ஆதரவை பெறவேண்டும்

## பிரிட்டன் வலியுறுத்து



ஜெனிவா, மார்ச் 10

இலங்கையில் புதிதாக நிறுவப்படக்கூடிய எந்தவொரு செயல்திறன்மிக்க நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் ஆதரவைப் பெற்றதாகவும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடையதாகவும் அமைய வேண்டும் - இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் பிரிட்டன் தலை மையிலான இணை அனுசரணை நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கை தொடர்பில் கடந்த 3ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் கருத்திலேயே பிரிட்டனின் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நல்லிணக்க செயல்முறையில் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டையும் அதனை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்தல், வீதி மறியல்களை நீக்குதல், வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் அவர்களின் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு இட மளித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை நாம் பாராட்டுகிறோம். மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டி 11

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் வழக்கு; புதிய நீதிபதிகளை நியமிக்கவேண்டும்

## சட்ட மா அதிபர் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைக்காக புதிய நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றம் அது தொடர்பான தீர்ப்பை விரைவில் வழங்கும் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிரதிவாதிகளிடம் விளக்கங்களை கோராமல் பிரதிவாதிகள் விடுவிக்கப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டே புதிய நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**பின்னணி**

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை 11

# மதுபான வரியை உயர்த்த அனுமதி!

கொழும்பு, மார்ச் 10

மதுபான வரியை உயர்த்துவதற்கு நிதி அமைச்சு முன்வைத்த முன்மொழிவுக்கு அரசாங்க நிதி பற்றிய (கோப்) குழு அனுமதி வழங்கியது. அந்தக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தலைமை யில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி, மதுபான 11

# 26ஆம் திகதி முதல் ஆனையிறவு உப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 10

நவீன உபகரணங்கள் மற்றும் வசதிகளுடன் மீளமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தின் உப்பு எதிர்வரும் 26ஆம் திகதி மக்கள் பாவனைக்குக் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல குறைபாடுகளுடன் செயல்பட்ட இந்த உப்பு தொழிற்சாலை அயடின் சேர்க்கும் தொழில்நுட்பம் மற்றும் வசதிகளுடனான நவீன மயப்படுத்தப்பட்டது. இங்கு உற்பத்தியாகும் உப்பு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் சந்தைக்கு வெளியிடப்படும் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பெண் அவமதிப்பு

## யூரியூப்பரை மடக்கிப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்த மக்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

இளம்பெண் ஒருவரை அவமானப்படுத்தும் விதமாக நடந்து கொண்டார் என்று கூறப்படும் யூரியூப்பர் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த யூரியூப்பர் தான் நடத்தி வரும் யூரியூப் சனலில் உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பான காணொலிகளை வழங்கி வருகிறார். இந்த நிலையில், அவர் இளம்பெண் ஒருவரை அவமானப்படுத்தும் காணொலி ஒன்று வெளியாகி - சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, குறித்த யூரியூப்பர் தான் அவமானப்படுத்திய இளம் பெண்ணின் வீட்டுக்கு சமரசத்துக்கு சென்றிருந்த நிலையில் அவரை அந்த ஊர் மக்களால் மடக்கிப் பிடித்து இளவாலை பொலிஸில் ஒப்படைத்தனர். (ஐ)

## நாடு முழுவதும் இன்றும் நாளையும் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 10

வடக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் இன்றும் நாளையும் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளை யில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அத்துடன், வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களை வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது. (ஐ)

## முக்கிய அரசியல்வாதியின் வீட்டில் தென்னக்கோன் மறைந்துள்ளார்!

கொழும்பு, மார்ச் 10

பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் முக்கிய அரசியல்வாதியின் வீட்டில் மறைந்திருக்கிறார் என்று தகவல் கிடைத்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வரலாற்றில் பொலிஸாருக்கு பயந்து ஒரு பொலிஸ்மா அதிபர் ஓடி ஒளிந்து கொள்வது இதுவே முதல் முறை.

ஷானி அபேசேகர ஒரு திறமையான நபர் என்பதால், மறைந்திருக்கும் பொலிஸ்மா அதிபரை கைது செய்வார்.

இதேவேளை, 76 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தக் கட்சியினருக்கு (தேசிய மக்கள் சக்தி) ஆட்சி அமைக்கும் அதிகாரம் கிடைத்துள்ளது. ஆகையால் அவர்களுக்கு மூன்று நான்கு ஆண்டுகள் அவகாசம் வழங்க வேண்டும். நாட்டுக்கு நல்லது செய்வார்கள் என்று நம்புகிறேன். தற்போது அரசாங்கம் நல்ல பாதையில் செல்கிறது என நம்புகின்றேன் - என்றும் கூறினார். (ஐ)

## அச்சுவேலி மருத்துவமனையில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

கிளீன் சிறீ லங்கா வேலை திட்டத்தின் கீழ் அச்சுவேலி பிரதேச மருத்துவமனை நேற்று துப்பரவு செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய கோப்பாய் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவனின் வழிகாட்டலில் கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் இந்த வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பிரதேச மருத்துவமனையின் பணிப்பாளர், பணியாளர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்தினர், அச்சுவேலி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், அச்சுவேலி சிற்றூர்தி சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள், சன சமூக நிலைய உறுப்பினர்கள் உட்பட பலர் மருத்துவமனை வளாகத்தை துப்பரவு செய்தனர். (ஐ)

## உரித்து வேலைத்திட்டம் ஆராய குழு நியமனம்!

கொழும்பு, மார்ச் 10

உரித்து "வேலைத்திட்டத்துக்கு அமைய காணி உரித்துகளை பெற்றுக்கொடுக்கும் செயல் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதா? இல்லையா என்பதை ஆராய்வதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளது.

காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் 9 பேர் அடங்குகின்றனர். (ஐ)

## மதம்சார் நூல்களுக்கான இறக்குமதி தடை நீக்கம்!

கொழும்பு, மார்ச் 10

மதங்கள் தொடர்பாக எழுதப்பட்ட புத்தகங்கள் மற்றும் படைப்புகளை இறக்குமதி செய்வதற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஆலோசனைக் குழு எடுத்த முடிவின்படியே இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சும் இந்தத் தடையை நீக்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதி அமைச்சர் கமகெதர திஸநாயக்க குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல்களைத் தொடர்ந்து, நாட்டுக்குள் மதப் படைப்புகளை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கின் பெரும் போர் இறுதி நாள் பதிவுகள்




சிறந்த துடுப்பாட்ட வீரர்




சிறந்த பந்து வீச்சாளர்



சிறந்த களத்தடுப்பாளர்




சிறந்த சகலதுறை வீரர்



சிறந்த விக்கெட் காப்பாளர்



போட்டியின் நாயகன்






வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் துடுப்பாட்ட போட்டியின் இறுதிநாளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை...! (படங்களும் தகவலும் - ஐ. சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.03.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## ஜே.வி.பியின் ஊழல் விசாரணை

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தேர்தல் வாக்குறுதி என்றால் அது ஊழல்வாதிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவது தான். இலங்கையைப் பொறுத்தவரையில் ஊழல்வாதிகள் என்றால் அவர்கள் அனைவருமே அரசியலில் ஆதிக்கம் செலுத்திய முக்கிய நபர்கள்தான். முக்கியமாக ராஜபக்ஷக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்குள் தள்ளிவிட்டதாகக் கூறியே தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது.

அந்த அடிப்படையில் அவர்களின் முதல் இலக்கு ராஜபக்ஷ குடும்பமாகவே இருக்க முடியும். அடுத்தது ராஜபக்ஷக்களோடு அரசியல் தேனிலவில் இருந்தவர்கள். இந்தநிலையில், தற்போது ரணில் விக்கிரமசிங்க காலத்தில் இடம்பெற்ற பிணைமுறி விவகாரம் தொடர்பில் புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென்று பொது பொதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுவது போன்று எவர் மீதும் விசாரணைகளை முன்னெடுக்கலாம். ஏனெனில், அதற்கான அதிகாரங்கள் அவர்களிடம் உண்டு. ஆனால், அவ்வாறான விசாரணைகள் கைது வரையில் செல்லுமா அல்லது இடைநடுவில் காணாமல் போய் விடுமா என்பதில்தான் தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதி உற்றுநோக்கப்படும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரையில் இடம்பெற்ற எந்தவொரு விசாரணையிலும் முக்கிய அரசியல் தலைகள் விழுந்த தான வரலாறு இல்லை. சில தலைகள் இலக்கு வைக்கப்படுவதுண்டு ஆனால், இறுதியில் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்படுவதே நடந்திருக்கிறது. இதன் மூலம் இலங்கையில் இடம் பெறும் விசாரணைகள் பெரும்பாலும் தூய்மையாக்கலுக்கே பயன்படுவதுண்டு.

இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி உண்மையாகவே விசாரணைகளை முன்னெடுக்குமா அல்லது முன்னர் இடம்பெற்றது போன்று, வெறும் கண்துடைப்பாகவே முடிவுறுமா என்பதைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டும். ஆனால், தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே நாட்டை ஊழலற்ற நாடாக்க வேண்டும் என்பதில் கரிசனை கொண்டிருந்தால் அதனை அவர்களால் நிச்சயம் செய்ய முடியும். ஏனெனில், அதற்கான அரசியல் பலம் வரலாற்றில் மிகவும் அரிதான வகையில் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பு இனி அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி ஒரு வாய்ப்புத்தான். ஆனால், அது வாய்ப்பாக செழித்து வளர்வதும் அல்லது முளையிலேயே கருகிவிடுவதும் அவர்களின் அணுகுமுறையிலேயே தங்கியிருக்கிறது. ஊழலை விசாரித்தல் என்பது இன்னொரு வகையில் தேசிய மக்கள் சக்தியின் - குறிப்பாக ஜே. வி. பியின் அரசியல் எதிர்காலத்துடனும் தொடர்பு பட்டிருக்கிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சில அரசியல் தலைகளை முடக்காது விட்டால், அவ்வாறானவர்கள் மீண்டும் அரசியலில் தலை தூக்க அதிக வாய்ப்புண்டு. அதன் பின்னர் ஜே.வி.பின் நிலைமை சிக்கலடைந்துவிடும் என்பதையும் ஜே. வி. பியின் உள்வட்டம் உணராமல் இருக்காது. அந்த வகையில் நோக்கினால் முக்கியமாக ராஜபக்ஷக்களின் கடந்த காலத்தைத் தோண்ட வேண்டிய தேவை ஜே. வி. பிக்கு இருக்கிறது. ஆனால், ராஜபக்ஷக்களை முழுமையாக முடக்குவதற்கான ஆதாரங்களை எவ்வாறு ஒன்று சேர்ப்பது - அது முடியுமா என்பதில்தான் ஜே. வி. பியின் ஊழல்வாதிகளை தண்டிக்கும் இலக்கின் வெற்றி தங்கியிருக்கிறது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசுக்கு மக்கள் பாடம் கற்பிப்பர்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

"தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் முற்றிலும் பொய்யானது என்பதை மக்கள் ஏற்றுள்ளார்கள். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சர்வஜன அதிகார கட்சியின் பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வேட்புமனுத்தாக்கல் வழங்கல் தொடர்பான நேர்காணலில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுவோம். தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யானது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தால் மிதமிஞ்சிய பொய்யால் மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளார்கள். நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் பொய்களுக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு பொருளாதார கொள்கை என்பதொன்று கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடுமையாக விமர்சித்தார். ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வெளியேறுவதாக குறிப்பிட்டார். ஆனால், தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கைகளை எவ்வித மாற்றமுமில்லாமல் அமுல்படுத்துகிறார். நாணய நிதியத்தை தஞ்சமடைந்து புகழ்பாடுகிறார்.

தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கை எவ்வாறானது என்பது கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. நாட்டை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தெரியாமல் அரசாங்கம் தற்போது தடுமாற்றமடைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம். அரசாங்கம் மக்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கியது. இதுவே எம்மை வெற்றி பெறச் செய்யும் - என்றார். (ஐ)

## உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட தயார்!

### சமல் ராஜபக்ஷ

கொழும்பு, மார்ச் 10

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தாம் விரும்புகிறார் என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் கார்ல்டன் மாளிகையில் நடந்தது. அங்கிருந்த உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மத்தியில் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர், "வேட்பாளர்கள் விரும்பினால், இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நானும் போட்டியிடுவேன் - என்றார். (ஐ)

## இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பணிமனை வவுனியாவில் திறப்பு



வவுனியா, மார்ச் 10

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட பணிமனை வவுனியா குருமண்காடு காளி கோவில் வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதிகளாக கலந்துகொண்ட கட்சியின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், எம். ஏ. சுமந்திரன், ப. சத்தியலிங்கம் ஆகியோர் புதிய பணிமனையை நாடா வெட்டி திறந்துவைத்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான து. ரவிகரன், க. கோடீஸ்வரன், ஞா. சிறிநேசன், குகதாசன், சிறிநாத், இ. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்கள், மாவட்ட கிளையினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள்.தடைப்பட்டவேலைகள் முடியும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்துபோகும் நீங்கள். சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதரர்களால் பகை வரக்கூடும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. புது வேலை அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**துலாம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள்.

**தனுசு**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். தாயார் ஆதரித்துப்பேசுவார். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடுகளைக்கட்டும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அனாவசியச் செலவுகளை கட்டுப் படுத்துவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும்.

# உள்நாட்டு துப்பாக்கிகள், கஞ்சாவுடன் வவுனியாவில் இரு இளைஞர்கள் கைது

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மேலும் மூவர் சிக்கினர்

வவுனியா, மார்ச். 10

வவுனியாவில் உள்நாட்டு துப்பாக்கிகள் மற்றும் கஞ்சாவுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, பாவற்குளம் படிவம் 2 பகுதியில் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட துப்பாக்கிகள், இரண்டு இடத்திலிருந்து மீட்கப்பட்ட துடன், அவற்றை வைத்திருந்த ஒருவரிடமிருந்து 2 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு மான் கொம்புகளும் மீட்கப்பட்டன.

இதனைய டுத்து அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அப் பகுதியைச் சேர்ந்த 32 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய் யப்பட்டனர்.

அத்துடன், நீதிமன்றால் இரண்டு பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவரும் இதன்போது கைது செய்யப்பட்டார்.

குறித்த மூவரும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப் பட்டு உளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

மேலும், வவுனியா, கோவில் குளம் பகுதியில் மாடு திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன் றில் முற்படுத்தப்பட்ட நிலை யில் நீதிமன்றின் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பாவற்குளம் படிவம் 2 பகுதியைச் சேர்ந்த மேலும் இருவரும் இதன்போது மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேலதிக விசாரணைகளின் பின்னர் உளுக்குளம் மற்றும் வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-10)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் முப்பொன் விழாவுக்கு ஏற்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச். 10

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன்விழாவை கொண்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளை யோர் மத்தியில் அடிகளாரின் பல்துறைசார் பணிகளை அறி யச் செய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணம் மறை மாவட்டம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ். அமலம ரித்தியாகிகள் ஆகிய அமைப் புக்கள் இணைந்து இவ்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதன் தொடக்க நிகழ்வானது எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் கலாசார பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காலை 8.30மணிக்கு அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம்பிக்கப்பட்டு புனித திரேசாள் பாடசாலையில் அரங்க நிகழ்வுகளுடன் நிறைவடையவுள்ளது.

முப்பொன் விழாவின் தொடர் செயல்பாடுகளாக பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சு போட்டிகள் மற்றும் ஆய்வரங்கம், ஆய்வுநூல் வெளியீடு, மலர் வெளியீடு, நிறைவு விழா போன்றவை முன்னெடுக்கப்படவுள்ளன. பாடசாலை மட்டப் போட்டிகளுக்குப் பொறுப்பாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன், ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார், அருட்பணி. சூ. யே. ஜீவரட்ணம், அமதி, மற்றும் அருட்தந்தை டியுக் வின்சன், அருட்பணி. அ. றொக்சன் ஆகியோர் செயல்படவுள்ளார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர் பட்டப் பபடிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப்பணி, வரலாற்றுப்பணி, சமூகப்பணி, மொழிப்பணி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான பொறுப்புகளை பேராசிரியர் தி. வேல்நம்பி, பேராசிரியர் அருட்பணி. ஞா. பிலேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசி ரியர் திருமதி சுபதினி றமேஸ் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள் ளார்கள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் முப்பொன் விழாக் குழுவின் இணைத் தலைவர்களாக அருட்பணி. ம.ஜெறோ செல்வநாயகம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோரும் இணைச் செயலர்களாக அருட்பணி. செ. அன்புராசா அமதி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரும் பொருளாளராக அருட்பணி. அ. பி. ஜெயசேகரம் அடிகளாரும் செயல்படுவர்.

எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் பாடசாலை மட்டப் போட்டிகளும் ஓகஸ்ட் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஆய்வரங்கும், செப்ரெம்பர் மாதமளவில் நிறைவுவிழா அரங்க நிகழ்வுகள் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கும் நடைபெறவுள்ளன. (ஐ)

# "தேர்தலுக்கு செலவு செய்யப்படும் நிதி குறித்து வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும்"

யாழ்ப்பாணம், மார்ச்.10

"தேர்தல் காலங்களில் செலவு செய்யப்படும் நிதி தொடர்பில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும். இது தொடர்பில் நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்"- இவ்வாறு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் காட்டார் தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் ஷாய்ரா தெரிவித்தார்.

பெண்களை அரசியல் நீதியில் பலப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்புக் களை தொடர்ந்தும் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழில்கபே அமைப்பு ஏற்பாடு செய்த அரசியலில் உள்ள பெண்களை வலுப்படுத்தல் மற்றும் இணையத்தளப் பாவனை தொடர்பான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,"எமது அமைப்பு பெண்கள் உரிமை, உலக சமாதானம் மற்றும் சுகாதார துறை சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்துகின்ற அமைப்பாக விளங்கி வரும் நிலையில் எமது செயல்பாடுகளை இலங்கையிலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்.

பெண்களின் இணையத்தளப் பாவனை சமூக ஊடகங்களை கையாளுதல் மற்றும் ஊடக வகிபாகம் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்ப டவுள்ளன.இலங்கையில் முதல் தடவையாக கபே அமைப்புடன் சேர்ந்து பெண்கள் வலுவூட்டல் செயல்பாடுகளில் பங்கெடுத்தமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது" - என்றார். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் மதப்பிரசாரம் 13 இந்தியர் நாடு கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 10

**சுற்றுலா வீசாவில் வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மதப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த 13 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டனர்.**

குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் புலனாய்வாளர் குழுவால் இவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடு கடத்தப்பட்டனர்.

இவ்வாறு வருகை தந்த 8 பேர் மாதகலில் தங்கியிருந்து நோய்களை பிரார்த்தனை மூலம் குணப்படுத்த முடியும் என்று கூறி பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தனர். அத்துடன், இவர்கள் மர விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றியும் வந்தனர். இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு பலாலி விமான சர்வதேச நிலையம் ஊடாக இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் பல உணவகங்களில் பணிபுரிந்த 5 இந்தியர்களும் பிடிக்கப்பட்டு பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக நாடு கடத்தப்பட்டனர். (ஐ)

# வடக்கு ரயில் மார்க்கத்தில் இரு ரயில்கள் இரத்தாகின!

கொழும்பு, மார்ச் 10

வடக்கு ரயில் மார்க்கத்தில் நேற்று இரண்டு ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கணேவத்த மற்றும் வெல்லாவ இடையேயான ரயில் பாதையில் உள்ள பாலம் ஒன்றில் அத்தியாவசிய பழுது பார்ப்பு பணிகள் முன்னெடுப்பதன் காரணமாக ரயில்கள் இரத்து செய்யப்பட்டன.

குருநாகல் ரயில் நிலையத்திலிருந்து நேற்று காலை 8.20 மணிக்கு மாஹோ சந்திக்கு புறப்படவிருந்த ரயில் மற்றும் காலை 10.50 மணிக்கு புறப்படவிருந்த ரயில் ஆகியனவே இவ்வாறு இரத்தாகின. (ஐ)

# கொக்குத்தொடுவாய்க்கு ஆளுநர் களப்பயணம்!

முல்லைத்தீவு, மார்ச் 10

கொக்குத்தொடுவாயில் கோட்டைக்கேணி பிள்ளையார் கோயில் முதல் அக்கரைவெளி வரையில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பிரதான வீதியை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேரில் பார்வையிட்டார்.

இந்த வீதி கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுகேணி கிராமங்களைச் சேர்ந்த மக்களின் 3,000 ஏக்கர் வரையிலான வயல் நிலத்துக்கு உள்ளீடுகளையும்,

விளைச்சலையும் கொண்டு செல்வதற்கு பயன்ப டுத்தும் பிரதான வீதியாக இது உள்ளது.

இந்த வீதி பயன்படுத்த முடியாத நிலையிலும் பல பாலங்கள் உடைவடைந்தும் உள்ளன என்றும் இதன்போது ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வீதியை அபிவிருத்தி செய்வதற்கும் அத்துடன் பராமரிப்பது தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்புடைய திணைக்களங்களுடன் கலந்துரையாடலை விரைவில் நடத்தி முடிவு எடுப்பதாக ஆளுநர் இதன்போது விவசாயிகளுக்கு உறுதியளித்தார். (ஐ)

# சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்கில் தனித்து போட்டி

கொழும்பு, மார்ச் 10

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்கில் தனித்து களமிறங்கவுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடனான கூட்டணி பேச்சின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர்,உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சில தொகுதிகளில் தனித்தும் சில தொகுதிகளில் கூட்டணியூடாகவும் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். கடந்த தேர்தல்களில் கூட்டணியாக களமிறங்கிய தொகுதிகளில் இந்த முறையும் அவ்வாறே களமிறங்குவதற்கான இணக்கப்பாடு தொடர்பிலேயே கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனித்து போட்டியிடுவதற்கு முயற்சிக்கின்றோம். கடந்த தேர்தல்களில் முற்றிலும் வேறுபட்ட சூழலே காணப்பட்டது. எனினும்,

புதிய அரசாங்கம் பொறுப்பேற்று 4 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அந்த சூழல் மாற்றமடைந்துள்ளது. முஸ்லிம் மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் உள்ளனர் - என்றார். (ஐ)

# கஞ்சா கலந்த மாவா விற்ற இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து கஞ்சா கலந்த மாவா பாக்கை விற்பனை செய்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வண்ணார்பண்ணையில் வீடொன்றில் மாணவர்களை இலக்கு வைத்து மாவா பாக்கு விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் குறித்த வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்தனர். அங்கு நடத்தப்பட்ட சோதனையில் கஞ்சா கலந்த 4 கிலோ 250 கிராம் மாவா பக்கு மற்றும் 12 கிலோ 500 கிரோம் பீடித்தூள், 24 ரின்கள் வாசனை திரவியம் என்பன கைப்பற்றப்பட்டன.

# ரயில் மோதி மாடு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயில் மோதி மாடு ஒன்று உயிரிழந்தது.

குறித்த சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மீசாலை - புத்தூர் சந்தி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

வாழ்வாதரத்துக்காக குடும்பஸ்தர் ஒருவரால் வளர்க்கப்பட்ட மாடு தண்டவாளத்தை கடக்க முற்பட்டவேளை புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. (ஐ)

# மித்தெனிய முக்கொலை மேலுமொவருவர் கைது!

கொழும்பு, மார்ச் 10

மித்தெனிய முக்கொலையுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை - குட்டிகல - படலங்கல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

39 வயதான இந்த சந்தேக நபர் குட்டிகல - படலங்கல பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, இந்தக் குற்றம் தொடர்பாக இதுவரை 11 சந்தேக நபர்களும் ஒரு பெண் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி கஜா என அழைக்கப்படும் அருண விதானகமகே அவரின் மகன், மகள் ஆகியோர் கைது செய் யப்பட்டுள்ளனர். (ஐ)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்:

# 57 சுயேச்சை, 18 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தின!

கொழும்பு, மார்ச் 10

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 57 சுயேச்சைக் குழுக்களும் 18 அரசியல் கட்சிகளும் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை 168 உள்ளூராட்சி நிர்வாகங்களுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. கட்டுப்பணம் செலுத்தும் காலவகாசம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னாள் ஜனாதிபதி ரணில்மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, மார்ச் 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்கும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பட்டலந்த அறிக்கை தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அல் ஜசீரா நேர்காணலைத் தொடர்ந்து பட்டலந்த அறிக்கை, மத்திய வங்கி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் பேசுபொருளாக மாறியுள்ளன.



மத்திய வங்கி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ரணில் விக்ரமசிங்க ஆட்சியிலிருந்த இடம்பெற்றவை என்பதால் இந்த விடயங்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படைத்தன்மைக்கு உறுதிபூண்டுள்ளதாகவும் ரணில் விக்ரமசிங்க, முன்னர் அரசியல் பாதுகாப்பைப் பெற்ற அனைத்து குற்றச்சாட்டுகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

# கோழி இறைச்சி விலை உயரும்!

கொழும்பு, மார்ச் 10

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளது.

அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி கோழி தீவனத்தின் விலையை குறைக்காததால் கோழி மற்றும் முட்டைகளின் விலைகள் அதிகரித்துள்ளதாக கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, யாழ்ப்பாணத்தில் கோழி இறைச்சியின் விலை 100 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 1,100 ரூபாய் முதல் விற்பனையாகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹெரோயின் கடத்திய இளம் பெண் கைது!

கொழும்பு, மார்ச் 10

ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ள 21 வயதுடைய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கம்பஹா - திவுலப்பிட்டி பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக இந்தப் பெண் கைது செய்யப்பட்டார். கைதானபோது அவரிடமிருந்து 10 கிராம் 100மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

கைதானவர் போதைப் பொருள் வர்த்தகத்தில் சிறிது காலமாக ஈடுபட்டு வருகிறார் என்றும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் சுமார் 2 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை மினுவாங்கொடை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த விலையில் மதுபானம் அறிமுகம்!

## சட்டவிரோத மது பாவனையை தடுப்பதற்கு அரசின் திட்டம்

கொழும்பு, மார்ச் 10

சட்டவிரோத மதுபான பயன்பாட்டை குறைக்கும் நோக்கில் குறைந்தவிலையில் புதிய வகை மதுபானத்தை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் சமீபத்திய கூட்டத்தில், மதுவரி ஆணையாளர் நாயகம் ஜெனரல் உதய குமார, மதுபானத்தின் விலை அதிகரிப்பால் பலர் சட்டவிரோத மதுபானங்களை அருந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

இதனால் அரசாங்கத்துக்கு வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலையைத் தடுக்க குறைந்த விலையில் மதுபான போத்தலை அறிமுகப் படுத்த திட்ட மிடப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தேசபந்து தென்னக்கோனின் சொத்துகள் பறிமுதலாகும்!

கொழும்பு, மார்ச் 10

**முன்னாள் பொலிஸ் மா அதிபரின் தேசபந்து தென்னக்கோனின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும் என பொதுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**



கொழும்பு - மோதரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே பிரதி அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன்படி, தேசபந்து தென்னக்கோன், தொடர்ந்து நீதிமன்றத்தில் முன்னிலை யாவதைத் தவிர்த்து வந்தால், சட்ட விதிகளின்படி அவரது சொத்துகளைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப் படும்.

இதேவேளை முன்னாள் பொலிஸ்மா அதிபரை கைது செய்ய தற்போது பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும், தேசபந்து தென்னக்கோனுக்கு மறைந்துக்கொள்ள எவரேனும் உதவினால், அவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புத்திக மனதுங்க கூறியுள்ளார். (ஐ)

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை அமைச்சரவையில் ஆராயப்படும்!

## அமைச்சரவை பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை குறித்து இந்த வாரம் அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

1980களின் பிற்பகுதியிலும் 1990இன் ஆரம்பத்திலும் இடம்பெற்ற படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் அவற்றுடன் அரசியல்வாதிகளிற்கு உள்ள தொடர்புகள் குறித்த ஆவணமான பட்டலந்த விசாரணை ஆணைக்குழு அறிக்கை குறித்து அந்த அரசாங்கம் ஆராயவுள்ளது.

பட்டலந்த வீடமைப்பு திட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்புள்ளதாக குற்றஞ்சாட்டும் இந்த அறிக்கை குறித்து சமீபத்தைய அல் ஜசீரா பேட்டியின் பின்னர் கவனம் திரும்பியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களை தொடர்ந்து இந்த விவகாரத் துக்குப் பொறுப்புக் கூறப் படவேண் டும் என்ற வேண்டு கோள்களும் எழுந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் காணப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ள அமைச்சரவை பேச்சாளர் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளார் என்பது தெரியும் இது அனைவருக்கும் தெரிந்த உண்மை குற்றச்சாட்டு களை எங்களால் நிராகரிக்க முடியாது என குறிப்பிட்டுள் ளார்.

எனினும் அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துள்ள அமைச்சரவை பேச்சாளர் அமைச்சரவையில் இது குறித்து ஆராய்ந்த பின்னர் அது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# உள்ளூராட்சி வேட்பாளர்கள் சொத்து விவரம் தரவேண்டும்!

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்யும் சகல வேட்பாளர்களும் தங்களது சொத்து மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

வேட்புமனு தாக்கல் செய்யப்படும்போது, அதில் 25 சதவீதமானோர் பெண் வேட்பாளர்களாக இருக்க வேண்டும் என்ற சட்டம் அமுல்படுத்தப்படும். ஒவ்வொரு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களும் தங்களது வேட்பாளர்கள் பட்டியலில் 10 சதவீதமானோரை பெண்களாகவும் மேலதிக பட்டியலில் 50 சதவீதம் பெண்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அதேநேரம், வேட்புமனுவில் 25 சதவீதம் இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் 18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

எனவே, வேட்புமனு தயாரிப்பின்போது, அரசியல் கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் - என்றும் கூறினார்.

# துப்பாக்கிகளுடன் ஐவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச் 10

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், இந்த சம்பவங்கள் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, வவுனியா - உலுக்குளத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் பாவக்குளத்தை சேர்ந்த 27, 32 வயது நபர்களாவர்.

காலி - எல்பிட்டியில் ரி - 56, ரிவால்வர் ரக துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் 3 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் 44 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மாத்தறை - தம்பகல்ல பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். 30 வயது நபர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

கொழும்பு - கடவத்தை - எல்தெனியவில் 9 மி. மீற்றர் துப்பாக்கி மற்றும் அதற்கான தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# கழிவு முகாமைத்துவ பயிற்சி திட்டம் அங்குரார்ப்பணம்!

நுவரெலியா, மார்ச் 10

இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் கிளீன் சிறீ லங்கா திட்டத்தின் கீழ் நுவரெலியா தலைமையக பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் முறையான கழிவு முகாமைத் துவம் தொடர்பான பயிற்சி வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.




நுவரெலியா மாவட்ட பொலிஸ் மா அதிபர் பிரியங்கர டி சில்வா தலைமையில் நுவரெலியா மாவட்ட பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வீடுகளில் வீசப்படும் குப்பைகளை தனித்தனியாக பிரித்து சேகரிக்கப்படும் தொட்டிகளை தனித்தனியாக கண்காணித்து, அதன் மூலம் குப்பைகளை சேகரித்து விற்பனை செய்வதுடன் தோட்டத்துக்கு உரம் வழங்கும் திட்டத்தையும் கிராம அளவில் பணியாற்றும் பொலிஸ் குழுக்கள் செயல்பட்டு வருகின் றன.

நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான பிளாஸ்டிக் கொள்கலன்கள் நுவரெலியா பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியங்கர்த சில்வா விடம் அகலவத்தை தோட்டக் கம்பனியின் நடவடிக்கைத் தலை வர் சஞ்சீவ திஸநாயக்க வினால் கையளிக்கப்பட்டது.

# வெளிநாட்டு சிகரெட்களை கடத்திவந்த இருவர் கைது!

கொழும்பு, மார்ச் 10

மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வந்த இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதானவர்களில் ஒருவர் கண்டி, குண்டசாலையைச் சேர்ந்த 32 வயதுடைய தனியார் துறை ஊழியர் ஆவார்.

மற்றொரு நபர் கண்டியைச் சேர்ந்த 50 வயதுடைய உடற் கட்டமைப்பு பயிற்றுவிப்பாளர் ஆவார். இருவரும் தங்கள் பொருட்களுக்குள் 23 ஆயிரம் வெளி நாட்டு சிகரெட்களை கடத்தி வந்த நிலையில் போதைப் பொ ருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட் டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு, மார்ச் 10

ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை அநுராதபுர பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் தலைமையக பொலிஸ்வளாகத்துக்குள்வைத்தே அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 170 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் இணைப்பு செய்யப்பட்டு சேவை செய்யும் 38 வயதுடைய நொச்சியாகம பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் ஆவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கைது செய்யப் பட்ட சந்தேக நபர் பொலிஸ் வளாகத்திலுள்ள மலசலகூடத்துக்குள் போதைப் பொருளை பயன்படுத்துவதாக மேலிடத்துக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து நடத்தப்பட்ட சோதனையின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை பாராளுமன்றில் சமர்ப்பியுங்கள்!

## அரசாங்கத்தை கோருகிறார் தயாசிறி

கொழும்பு, மார்ச் 10

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இமாம் மற்றும் அல்விஸ் அறிக்கைகளையும் படலந்த சம்பவம் தொடர்பான அறிக்கையையும் அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் மொத்த ஊழியர்படையில் 66.6 சதவீதம் ஆண்களின் பங்களிப்பும், 31.3 சதவீதம் பெண்களின் பங்களிப்பும் காணப்படுகிறது. இன்றும் பெரும்பாலான பெண்கள் இல்லத்தரசிகளாக வாழும் நிலைமை காணப்படுகிறது. பெண்களின் முன்னேற்றத்துக்கு அமைய இந்நிலைமை மாற்றம் பெற வேண்டும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள 25 சதவீத பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டை பாராளுமன்றம், மாகாண சபைத் தேர்தல்களிலும் அறிமுகம் செய்ய வேண்டும்.

வன்புணர்வு சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் பல ஆண்டுகாலம் இழுத்தடிக்கப்படுவதால் பாதிக்கப்படும் பெண்கள் உளவியல் ரீதியிலும் சமூக மட்டத்திலும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

ஆகவே, வன்புணர்வு தொடர்பான வழக்குகளை விசேட நீதிமன்றம் ஊடாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நீதியமைச்சிடம் வலியுறுத்துகிறேன் - என்றார். (ஐ)

# மீண்டும் துப்பாக்கிச்சூடு கம்பஹாவில் இருவர் காயம்!

கொழும்பு, மார்ச் 10

கம்பஹாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவதுகம்பஹா - கிரிந்திவிட்ட - அகரவிட்ட பகுதியில் உள்ள மோட்டார் சைக்கள் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யப் படும் நிலையம் ஒன்றின்மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. காயமடைந்த இருவரும் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். இதில், கடையில் இருந்த இரண்டு பேர் காயமடைந்தனர். இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு 9 எம். எம். ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. (ஐ)

# கம்பஹா துப்பாக்கிச்சூட்டுக்கு சஞ்சீவ ஆதரவாளரே காரணம்!

கொழும்பு, மார்ச் 10

கம்பஹாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு உறுப்பினர் கணேமுல்லை சஞ்சீவவின் ஆதரவாளர்கள் இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயமடைந்தனர். இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையகத்தில் இருந்த இருவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையத்தின் உரிமையாளர் என்பதுடன் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர் என்றும் பாதாள உலகக் குழுவை சேர்ந்த கெஹல்பத்தர பத்மேவுடன் தொடர்புடையவர் என்பதும் தெரியவந்துள்ளது.

அத்துடன், கணேமுல்லை சஞ்சீவவின் ஆதரவாளரான சுமித் என்பவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டின் பின்னணியில் இருக்கலாம். மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக உரிமையாளரை மிரட்டியிருப்பதும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# முஸ்லிம் விவாக சட்டத்தை விரைவாகத் திருத்துங்கள்!

## பைசர் முஸ்தபா வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 10

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட திருத்தங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

திருமண வயதை 18ஆக திருத்தம் மேற்கொள்ள முஸ்லிம் சமூகத்திலும் உடன்பாடு இருக்கிறது என புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் 1951ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டதாகும். என்றாலும் தற்போது காலத்துக்கு ஏற்றவகையில் அதில் திருத்தங்களை மேற்கொள்ள நீண்டகாலமாக கலந்துரையாடி வருகிறோம்.

குறிப்பாக திருமண வயது தொடர்பில் நாட்டில் இருக்கும் பொதுவான சட்டம் 18 வயதாகும்.

முஸ்லிம் சமுகத்திலும் திருமண வயதை 18ஆக திருத்துவதற்கு உடன்பாடு இருக்கிறது.

அதேபோன்று விவாக சான்றிதழில் கையெழுத்திடுவது பெண்களின் உரிமையாகும். முஸ்லிம் பெண்களுக்கும் தங்களின் விவாக சான்றிதழில் கைச்சாத்திடும் உரிமை இருக்க வேண்டும். இந்தத் திருத்தத்தை மேற்கொள்ள சமூகத்தில் உடன்பாடு இருக்கிறது.

அதேபோன்று விவாகரத்து வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்களில் இடம்பெற்றாலும் முஸ்லிம் விவாகரத்து வழக்குகள் காதி நீதிமன்றங்களிலே விசாரிக்கப்படுகின்றன.

அதனால் காதி நீதிமன்றங்களை வலுப்படுத்த வேண்டும். அத் துடன், காதி நீதிமன்ற விடயத்திலும் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# விபத்தில் யுவதி பலி!

கொழும்பு, மார்ச் 10

தனியார் பேருந்து மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்தார். அவரின் தந்தை படுகாயமடைந்தார்.

அநுராதபுரம் - பந்துலகமவில் உள்ள அரச உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் படித்து சந்தரேகா சுபோதனி ஹேமந்தா என்ற யுவதியே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

பேருந்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# நாட்டின் 10ஆவது ஜனாதிபதி ஐ.தே.கவிலிருந்தே தெரிவாவார்!

## வஜிர அபேவர்த்தன நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 10

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணையாதுவிட்டாலும் பத்தாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டின் இறுதியில் நாடு மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும்,

கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பெண்கள் தொடர்பான பிரகடனம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதுமாத்திரமின்றி நாட்டுக்கு தேவையான பல்வேறு சட்டங்கள் அவரால் முன்வைக்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி சட்டம், ஊழல் எதிர்ப்பு சட்டம், கடனை எவ்வாறு மீள செலுத்துவது என்பதற்கான தேசிய கொள்கை சட்டம் என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, சர்வதேச நிதி நிறுவனங்கள் அனைத்தும் பெண்களின் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்களில் பணம் பாதுகாக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர்.

அதற்கமைய அந்த சட்டங்களில் பெண்களுக்கு பெருமளவில் முன்னுரிமை யளிக்கப்பட்டிருந்தது. இவற்றில் மத்திய வங்கி சட்டமும் உள்ளடங்குகின்றது. இவற்றுக்கு புறம்பாக செயற்பட முடியாது.ஐக்கிய தேசிய கட்சி ஒரேயோர் ஆசனத்தைப் பெற்றபோது அதன் அரசியல் பயணம் முடிந்து விட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அந்த ஓர் ஆசனமே வங்குரோத்தடைந்திருந்த நாட்டை அதிலிருந்து மீட்டது.

ஓர் ஆசனத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதியானதைப் போன்று, ஆசனம் இன்றியும் ஜனாதிபதியாக முடியும். சிறப்பாக செயல்பட்டால் 10ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியையும் ஐக்கிய தேசிய கட்சியால் உருவாக்க முடியும்.

அது ஜனநாயக ரீதியிலோ, அரசமைப்பு ரீதியிலோ அல்லது பொருளாதார நெருக்கடியிலோ இடம்பெறலாம். நான் அறிந்த வகையில் இந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் மீண்டும் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் - என்றார். (ஐ)

# வரி வருமானத்தை அதிகரிப்பதற்காக மின் கட்டணத்தை உயர்த்தத் திட்டம்!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, மார்ச் 10

அரசாங்கம் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு பதிலாக, மின் கட்டணத்தை அதிகரித்து, மறைமுக வரியை அறிவிடுவதற்கு திட்டமிடுகிறது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு பதிலாக, மின் கட்டணத்தை அதிகரித்து நாட்டிலுள்ள அனைவரிடமும் தண்டப்பணம் - மறைமுக வரியை அறிவிடத் திட்டமிடுகிறது. நாணய நிதியத்தின் நியாயமற்ற அழுத்தங்களுக்கு அடிபணிந்து மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

இதற்கு முன்னர் பொது மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய மின் கட்டணத்தை குறைக்க முடிந்தது.

எனவே மீண்டும் நியாயமற்ற முறையில் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டால், நாம் சட்டரீதியாக அது குறித்து பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தி அந்த முயற்சியை தோற்கடிப்போம் - என்றார்.

# ஒரு கோடியே 72 இலட்சம் பேர் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

கொழும்பு, மார்ச் 10

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 72 இலட்சத்து 96 ஆயிரத்து 330 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் அளித்த தகவலில்,

4,872 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக இந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகள் மட்டத்தில் கலந்துரையாடல் நடைபெற்றதாக சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் திருமலையில்



திருகோணமலை, மார்ச்.10

இ.எம்.எஸ். விற்பனை ஊக்குவிப்பு திட்ட நிகழ்ச்சியானது இலங்கை தபால் திணைக்களத்தால் திருகோணமலை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே. எம். எஸ். நாமல் குமார தலைமையில் திருகோணமலை மாவட்ட அஞ்சல் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதேவேளை, திருகோணமலை நகர்ப்புறத்தை மையமாகக் கொண்டு அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அஞ்சல் அலுவலகத்திலிருந்து நடந்து சென்று, துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது மட்டுமன்றி இ. எம். எஸ். சேவை குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

திருகோணமலை நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு இந்த விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

தபால் பொருட்களை துரிதமாகவும் பாதுகாப்பா கவும் நம்பிக்கையுடனும் உலகின் பல்வேறு பிரதேசங்களுக்கும் கொண்டு செல்வதற்கு உருவாக்கப்பட்ட சேவையே இதுவாகும்.

தற்போது இலங்கை உள்ளிட்ட 48 நாடுகள் இந்த இ. எம். எஸ். முறையில் பொருட்களைப் பரிமாற்றிக் கொள்கின்றன. (எ)

# மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை



மட்டக்களப்பு, மார்ச். 10

மட்டக்களப்பில் மீண்டும் பொலிஸார் குடியிருப்பாளர்களின் விவரம் திரட்டுவதற்கான விண்ணப்பபடிவங்களை வீடுவீடாக சென்று வழங்கும் நடவடிக்கையை நேற்றையதினம் ஆரம்பித்துள்ளதையடுத்து மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 76ஆம் பிரிவுக்கமைய வீடுகளில் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கியிருப்போரின் விவரங்களை பெற்றுக் கொள்வதற்கான தலைப்பிலான இந்த விண்ணப்பப் படிவம் மட்டக்களப்பு நகரிலுள்ள பகுதிகளில் வீடுவீடாக பொலிஸார் சென்று வழங்கி வருகின்றனர்.

2016 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு மீண்டும் பொலிஸ் பதிவு நடவடிக்கை ஆரம்பித்துள்ளது.

கிழக்கில் தீவிரவாத குழுக்களின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக அரசாங்கம் அண்மையில் தகவல் வெளி யிட்ட நிலையில் பொலிஸ் பதிவு நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (எ)



நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் எஸ். இ. டி. ஆர். செயல்திட்ட நிதிப் பங்களிப்புடன் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியஸ்தம் தொடர்பான பயிற்சி செயலமர்வு கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றது.

## மகளிர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு செயலமர்வு

மருதமுனை, மார்ச்.10

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது லக்ஸ்டோ வலையமைப்பு மற்றும் அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு மற்றும் கவியரங்கு மரநடுகை என்பன அடங்கிய சங்கமம் நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை மருதமுனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

லக்ஸ்டோ வலையமைப்பின் பிரதானியும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், தேசிய சமாதான நீதிபதிகள் சபை தலைவருமான கலாநிதி ஏ. எல். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மகளிர் பற்றிய சட்டங்கள், குற்றங்கள், பாதிப்பு மற்றும் போதைப் பொருளால் சீரழியும் குடும்பங்கள் பற்றிய விழிப்புணர்வை காதி நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எப். எம். அன்சார் மௌலானா நிகழ்த்தினார். (எ-06)

## பெண்கள் அமைப்பின் மகளிர் தினம்




திருகோணமலை, மார்ச்.10

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் சர்வதேச மகளிர் தின விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

"அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள், சமத்துவம், அதிகாரமளித்தல்" என்ற கோட்பாட்டுக்கு அமைவாக மகளிர் தின நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அனைத்து மத பெண்களும் இன மத பேதமின்றி மகிழ்ச்சியாகவும், ஒற்றுமையுடனும் நிகழ்வில் பங்கு பற்றினர். (எ)

## திருக்கோணேச்சரத்தில் இந்திய தூதரக அதிகாரிகள் ஆலய திருப்பணிகள் தொடர்பில் விரிவாக ஆராய்வு





திருகோணமலை, மார்ச்.10

திருக்கோணேச்சரம் ஆலயத தில் எதிர்காலத் திருப்பணி தொடர்பில் ஆராய்ந்து கொள் வதற்கு இந்திய தூதரக உயர் அதிகாரிகள் ஆலயத்துக்கு வருகைதந்து பல விடயங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் செஞ் சொற்செல்வர் ஆறு. திருமுருகன், ஆலய நிர்வாக சபைத் தலைவர், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, திருக் கேதீச்சரம் ஆல யத்தை கருங்கற்களால் அமைத்தது போன்று திருக்கோணேச்சரம் ஆலய திருப்பணிக்கும் உதவுமாறு கேட்கப்பட்டமை குறித்து அக்கறை எடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகிச்சைக்கு வந்த 299 பேரிடம் மருத்துவர் பாலியல் அத்துமீறல்

### பிரான்ஸில் பெரும் பரபரப்பு

பாரிஸ், மார்ச்.10

பிரான்ஸில் மருத்துவர் ஒருவர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்த 299 பேரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வான்னெஸ் நகரைச் சேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் ஜோயல் லிஸ்கோர்னெக் (வயது -74), கடந்த 2017ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் மீது ஏற்கனவே குழந்தைகள் தொடர்பான ஆபாச படங்களை வைத்தி ருந்ததாக கடந்த 2005ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மருத்துவர் ஜோயல் மீது ஏராளமான பெண்கள் பாலியல் புகார் தெரிவித்துள்ளனர்.

இதில், பெரும்பாலானோர் ஜோயலி டம் சிகிச்சைக்காக சென்றவர் கள் என்றும், அவர்கள் பாலி யல் துன்புறுத்தலுக்கு ஆளான சமயத்தில் சிறுமிகளாக இருந் துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையில், ஜோயல் இதுவரை 299 பேரிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அவர் கடந்த 1989ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து வந்த மருத்துவமனைகளில் பாலியல் அத்துமீறல்கள் அரங் கேறியுள்ளன.

குறிப்பாக நோயாளிகள் மயக்க நிலையில் இருக்கும் போது அவர்களிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட் டதாக விசாரணையின்போது ஜோயல் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமின்றி, தனது மகனின் தோழிகளையும் ஜோயல் பாலியல் வன்கொடுமை செய்ததாக வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தொடர்ந்து ஜோயலிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்ற னர். இந்த பாலியல் அத்துமீறல் வழக்கு பிரான்ஸில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஏ)

படையினர் - கிளர்ச்சியாளர்கள் இடையே

## சிரியாவில் பயங்கர மோதல் ஆயிரம் பேர் உயிரிழந்தனர்!



டமாஸ்கஸ், மார்ச்.10

**சிரியாவில் படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.**

சிரியாவில் அல் ஆஷாத் தலைமையிலான அரசு கடந்த டிசெம்பர் மாதம் கவிழ்ந்தது. ஜனாதிபதியாக இருந்த அல் ஆஷாத் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றார். இதையடுத்து, சிரியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய ஹயத் தஹிர் அல் ஷியாம் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி அல் ஆஷாத் ஆதரவாளர்கள் குழுக்களாக சேர்ந்து சிரியா அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சிரியா அரசப்படைகள் மீதும் இந்த கிளர்ச்சிக்குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனிடையே, சிரியாவின் கடற்கரை பகுதியில் அமைந்துள்ள லடாகியா, டர்டோஸ் மாகாணங்களில் கிளர்ச்சியாளர்களுக்கும், படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் முதல் கடந்த இரு தினங்களாக மோதல் நடைபெற்று வருகிறது. படையினரின் சோதனைச் சாவடிகள், இராணுவ நிலைகள், ரோந்து வாகனங்களை குறிவைத்து அல் ஆஷாத் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்கு படையினர் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், கிளர்ச்சியாளர்களுக்கும், படையினருக்கும் இடையே நடந்துவரும் மோதலில் இதுவரை ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இதில் 745 பேர் பொதுமக்கள், 125 பேர் படையினர், 148 பேர் கிளர்ச்சியாளர்கள் எனத் தெரியவந்துள்ளது. மோதல் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் கூடுதல் படைகளை சிரியா அரசு அனுப்பி வைத்துள்ளது. (ஏ)

## 80,000 அரசு பணியிடங்களை இரத்து செய்ய ட்ரம்ப் முடிவு

வாஷிங்டன், மார்ச்.10

அமெரிக்காவில் 80, 000 அரசு பணியிடங்களை இரத்து செய்ய அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றார். அவர் பதவியேற்றவுடன் "அரசு செயல்திறன்" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக தொழிலதிபர் எலான் மஸ்க் பதவி வகிக்கிறார்.

அந்தத் துறையின் பரிந்துரைகளின்படி அமெரிக்க அரசின் செலவீனங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் ஓய்வு பெற்ற இராணுவத்தினருக்கான துறையில் 80, 000 அரசு பணியிடங்களை இரத்து செய்ய ட்ரம்ப் அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை கணிசமாக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஏ)

## திபெத்தில் நிலநடுக்கம்

பீஜிங், மார்ச்.10

திபெத்தில் நேற்று அதிகாலை 02. 30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4.0 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (ஏ)

## கனமழை, வெள்ளத்தில் சிக்கி ஆர்ஜென்ரீனாவில் 10 பேர் பலி



பியூனோஸ் அயர்ஸ், மார்ச்.10

ஆர்ஜென்ரீனாவில் கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் பலியாகினர்.

பியூனோஸ் அயர்ஸ் மாகாணத்தில் பாஹியா பிளான்கா பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதனால், நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வீடுகள், கட்டடங்களை சுற்றி மழைநீர் தேங்கிக் காணப்படுகிறது.

இதுபற்றி மாகாணத்தின் பாதுகாப்பு துறை அமைச்சர் ஜேவியர் அலன்சோ நேற்றுக் காலை வெளியிட்ட அறிக்கையில், கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் வரை பலியாகினர். இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 800இற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ஏ)

## உக்ரைனில் தாக்குதலை தீவிரப்படுத்தியது ரஷ்யா

### 6 குழந்தைகள் உட்பட 25 பேர் பலி

கீவ், மார்ச். 10

உக்ரைனின் டோனெட்ஸ்க், கார்கிவ் மற்றும் ஒடிசா உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 6 குழந்தைகள் உட்பட 25 பேர் பலியாகினர்.

உக்ரைனுக்கு எதிராக கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் ரஷ்யா படையெடுத்தது.

இதற்கு உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா தொடுத்த போரானது 3 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில், உக்ரைனுக்கு வழங்கி வந்த புலனாய்வுத் தகவலையும் நிறுத்துவது என அமெரிக்கா அண்மையில் முடிவு செய்துள்ளது.

இதனால், உக்ரைனில் ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் டோனெட்ஸ்க் பகுதியில் 6 குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

40 பேர் காயமடைந்துள்ளனர். இதனை அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். இதுதவிர, கார்கிவ் மற்றும் ஒடிசா பகுதிகளில் வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகள் கடுமையாக தாக்கப்பட்டன.

பாலிஸ்ரிக் ரக ஏவுகணைகள், நகரில் உள்ள குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் வணிக வளாகம் ஒன்றின் மீது தாக்குதலை தொடுக்க பயன்படுத்தப்பட்டன. இதுபற்றி ஜெலன்ஸ்கி வெளியிட்ட ரெலிகிராம் பதிவில், தாக்குதலை தொடர்ந்து அவசரகால பணியாளர்கள் சம்பவ பகுதிக்கு விரைந்தனர்.

அப்போது, மீட்புக் குழுவினரை இலக்காக கொண்டு ரஷ்யா மற்றொரு தாக்குதலை உள்நோக்கத்துடன் நடத்தியது. இதுபோன்ற தாக்குதல்கள், ரஷ்யாவின் இலக்குகள் மாறவில்லை என எடுத்து காட்டுகின்றன என தெரிவித்துள்ளார்.

அந்த இடங்களில் நடத்தப்பட்ட வேறு சில தாக்குதலில் 9 பேர் பலியாகினர். 13 பேர் காயமடைந்தனர்.

கார்கிவ் நகரில் போஹோதுகிவ் பகுதியில் நிறுவனம் ஒன்றின் மீது நடந்த ட்ரோன் தாக்குதல்களில் 3 பேர் பலியாகினர். 7 பேர் காயமடைந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஏ)

## அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் திட்டம் வடகொரிய ஜனாதிபதி நேரில் ஆய்வு

பியாங்யாங், மார்ச்.10

அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் கட்டுமானத் திட்டங்களை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நேரில் ஆய்வு செய்தார்.

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் தாண்டும் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகளைச் சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வருகிறது.

மேலும், தங்கள் வசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையிலும் வட கொரியா ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி கிம், கப்பல்கட்டும் தளங்களுக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று அங்குள்ள கடற்படை கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் கட்டுமான திட்டங்களை ஆய்வு செய்தார்.

இதன்போது, கடலால் சூழப்பட்ட நாட்டின்இறையாண்மைக்கு, கடற்படை சக்தி மற்றும் அணு ஆயுதங்கள் மிக முக்கியமானவை என்று கிம் குறிப்பிட்டார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போரில் யாழ்ப்பாண கல்லூரி வெற்றி

## 52 வருடங்களின் பின் வீழ்ந்த சென். பற்றிக்ஸ்




யாழ்ப்பாணம், மார்ச்.10

பொன் அணிகளின் போரில் 52 வருடங்களின் பின்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வீழ்த்தி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிறைவடைந்த 108ஆவது பொன் அணிகளின் போரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை 59 ஓட்டங்களால் யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றி கொண்டது.

அணித் தலைவர் சிதம்பரலிங்கம் மதுசன் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து 11 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார். அவர், இரண்டாவது இன்னிங்ஸில் சுரேஷ் கோபிஷனுடன் 7ஆவது விக்கெட்டில் பெறுமதிமிக்க 71 ஓட்டங்களைப் பகிர்ந்து தனது அணியின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

முதல் ஒன்றரை நாட்களில் இப் போட்டி சம அளவில் மோதிக்கொள்ளப்பட்டபோதிலும் இரண்டாம் நாள் ஆட்டத்தின் பிற்பகுதியில் சென். பற்றிக்ஸின் கை மேலோங்கியிருந்தது.

இதன் காரணமாக சென். பற்றிக்ஸ் வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டது.ஆனால், போட்டியின் கடைசி நாளான சனிக்கிழமை காலை 5 விக்கெட்கள் இழப்புக்கு 65 ஓட்டங்களிலிருந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி 159 ஓட்டங்களைப் பெற்று சற்று பலமான நிலையை அடைந்தது.

மொத்த எண்ணிக்கை 70 ஓட்டங்களாக இருந்த போது 6ஆவது விக்கெட் வீழ்ந்ததால் சென். பற்றிக்ஸ் அணியினர் பெரும் சந்தோஷத்தில் மிதந்தனர்.

ஆனால், மதுசனும் கோபிஷனும் மிகவும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 7ஆவது விக்கெட்டில் பெறுமதிமிக்க 71 ஓட்டங்களைப் பகிர்ந்து போட்டியில் திருப்புமுனையை ஏற்படுத்தினர்.

120 பந்துகளை எதிர்கொண்ட மதுசன் 32 ஓட்டங்களையும் 84 பந்துகளை எதிர்கொண்ட கோபிஷன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் குமணதாசன் சாருஷன் 4 விக்கெட்களையும் பிரேமநாயகம் மதுசன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

146 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 35.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 86 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் பற்குணம் மதுசன் தனித்து போராடி 73 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையை எட்டவில்லை.

இரண்டாவது அதிகபட்ச எண்ணிக்கையாக 14 உதிரிகள் சென். பற்றிக்ஸ் அணியின் மொத்த எண்ணிக்கைக்கு சேர்ந்தது.

பந்துவீச்சில் சிதம்பரலிங்கம் மதுசன் 7 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 16.3 ஓவர்களில் 23ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களைக் கைப்பற்றினார்.மதுசனுக்கு பக்கபலமாக பந்துவீசிய வாசுதேவன் விஷ்ணுகோபன் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார். (எ)

# மோசமான சாதனையில் ரோஹித் சர்மா முதலிடம்




டுபாய், மார்ச். 10

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மோசமான சாதனையில் ரோஹித் சர்மா முதலிடம் பிடித்துள்ளார்.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் நேற்று மோதின. டுபாயில் நடைபெற்ற இந்த போட்டிக்கான நாணயச்சுழற்சியில் நியூசிலாந்து அணியின் தலைவர் மிட்செல் சாண்ட்னர் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதனையும் சேர்த்து ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியா தொடர்ச்சியாக சந்தித்த 15ஆவது நாணயச்சுழற்சி தோல்வி இதுவாகும். இந்திய அணியின் தலைவராக ரோஹித் சர்மா சந்தித்த 12ஆவதுதோல்வியாகும்.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் நாணயச்சுழற்சியில் தொடர்ச்சியாக அதிக தோல்விகளை சந்தித்த தலைவர் என்ற மோசமான சாதனையில் பிரையன் லாராவுடன் இணைந்து முதலிடத்தை பிடித்துள்ளார். (எ)

# கேஸ்பர் ரூட் தோல்வி

கலிபோர்னியா, மார்ச்.10

இண்டியன் வெல்ஸ் ஓபின் ரென்னிஸ் தொட ரில் கேஸ்பர் ரூட் அதிர்ச்சி தோல்விய டைந்தார்.



பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள இண்டியன் வெல்ஸ் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நோர்வேயின் கேஸ்பர் ரூட், அமெரிக்காவின் மார்கஸ் ஜிரோனை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 7-6 (7-4) என்ற புள்ளிக்கணக்கில் மார்கஸ் ஜிரோனும், ஆட்டத்தின் 2ஆவது செட்டை 6-3 என்ற புள்ளிக்கணக்கில் கேஸ்பர் ரூட்டும் கைப்பற்றினர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செட் பரபரப்பாகநடைபெற்றது. இதில் அனுபவ வீரரான கேஸ்பர் ரூட் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், யாரும் எதிர்பார்க்காத வண்ணம் மார்கஸ் ஜிரோன் 6-2 என்ற புள்ளிக்கணக்கில் கேஸ்பர் ரூட்டை வீழ்த்தினார். இறுதியில் இந்த ஆட்டத்தில் 7-6 (7-4), 3-6, 6-2 என்ற செட் கணக்கில் கேஸ்பர் ரூட்டை வீழ்த்தி மார்கஸ் ஜிரோன் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். அனுபவ வீரர் கேஸ்பர் ரூட் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# நாம் நினைத்தது போன்று இந்த சீசன் அமையவில்லை

## ஸ்மிருதி மந்தனா ஏமாற்றம்

லக்னோ, மார்ச்.10

இது ஒரு நல்ல சீசனாக அமையும் என்று நினைத்தோம். ஆனால், லீக் சுற்றுடன் வெளியேறியது ஏமாற்றமளிக்கிறது என்று ஆர். சி. பி. அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா தெரிவித்தார்.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் லக்னோவில் நடைபெற்ற போட்டியில் உ.பி. வாரியர்ஸ் - பெங்களூரு அணிகள் மோதின. இதில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உ. பி. வாரியர்ஸ் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட நடப்பு சம்பியன் ஆர். சி. பி. லீக் சுற்றுடன் வெளியேறியது. இந்த சீசனில் டில்லி கப்பிட்டல்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் பிளேஓப் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

உ.பி.வாரியர்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறின. இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் ஆர். சி. பி. அணித் தலைவி ஸ்மிருதி மந்தனா கூறுகையில், “இப்போட்டியின் முதல் பந்திலிருந்தே அவர்கள் அதிரடியாக துடுப்பாட்டம் செய்தனர். சீசனின் கடைசி கட்டத்தில் அவர்கள் வித்தியாசமான மனநிலையில் இப்போட்டியை விளையாடினர்.

கடைசி மூன்று ஓவர்களில் நாங்கள் நன்றாக விளையாடினோம். நாங்கள் தொடங்கிய விதத்தின் மூலம் இது ஒரு நல்ல சீசனாக இருக்கும் என்று நினைத்தோம். ஆனால், கடைசி 5 ஆட்டங்களில் எங்களுக்கு இருந்த எதிர்பார்ப்புகளை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நிச்சயமாக இந்த சீசனிலிருந்து திரும்பப் பெற நிறைய உள்ளது”- என்றார். (எ)

# உ. பி. வாரியர்ஸ் வெற்றி ஆர். சி. பி. வெளியேற்றம்

லக்னோ, மார்ச்.10

12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உ. பி. வாரியர்ஸ் வெற்றி பெற்றது. இதனால், ஆர். சி. பி. அணி லீக் சுற்றுடன் வெளியேறியது.

5 அணிகள் பங்கேற்றுள்ள 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில், நேற்று முன்தினம் இரவு இந்தியாவின் லக்னோவில் நடந்த 18ஆவது லீக் ஆட்டத்தில் உ.பி. வாரியர்ஸ் - பெங்களூரு அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய உ.பி.வாரியர்ஸ் அணி அதிரடியாக விளையாடியது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 225 ஓட்டங்கள் குவித்தது.

உ.பி.வாரியர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக ஜார்ஜியா வால் 99 ஓட்டங்கள் எடுத்தார். பெங்களூர் தரப்பில் ஜார்ஜியா வரேஹம் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 226 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு 19. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 213 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உ. பி. வாரியர்ஸ் வெற்றி பெற்றது. பெங்களூரு தரப்பில் அதிகபட்சமாக ரிச்சா கோஷ் 69 ஓட்டங்கள் எடுத்தார்.

உ.பி.வாரியர்ஸ் தரப்பில் எக்லெஸ்டோன், தீப்தி சர்மா தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட நடப்பு சம்பியன் ஆர். சி. பி. லீக் சுற்றுடன் வெளியேறியது. (எ)

# இலங்கை கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார கைது!

கொழும்பு, மார்ச். 10

இலங்கை கிரிக்கெட் அணி வீரர் அஷேன் பண்டார பிலியந்தலை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பிலியந்தலை - கொல்லமுன்ன பகுதியில் வசிக்கும் அஷேன் பண்டார, நபரொருவரின் வீடொன்றுக்குள் நுழைந்து மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட அஷேன் பண்டாரவின் வீட்டுக்கு அருகாமையில் உள்ளவருடன், வீதியை மறித்து கார் நிறுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, எதிர்வரும் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில்...

தொடர்பாக மட்டுமே ஆராயப்பட்டது. கட்சியின் மத்திய செயல்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. வடக்கு - கிழக்கு மாவட்டங்களின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்தே போட்டியடும்.

இந்தத் தேர்தல் முக்கியமானதொரு தேர்தல். நாங்கள் ஒவ்வொரு தேர்தல்களையும் முக்கியமானதொரு தேர்தல் என்றே கூறி வந்துள்ளோம். உண்மை அதுதான். ஒவ்வொரு தேர்தல்களில் அந்தந்தக் காலப்பகுதிகளில் வேறு வேறு நோக்கங்களுக்காக முக்கியமான தேர்தலாக இருக்கும். இம்முறை நாடு அநுர அலையில் உள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு தவிர ஏனைய மாவட்டங்களில் அநுர அலையில் எமது மக்களின் வாக்குகள் சென்றுள்ளன. திருகோணமலையில், மட்டக்களப்பில் நாம் பெரும்பான்மை பெற முடியாது. வடக்கில் நாம் தான் பெரும்பான்மை. எனினும் மக்கள் அநுர அலையில் சிக்கி ஜனாதிபதித் தேர்தலை காட்டிலும் பாராளுன்றத் தேர்தலில் அதிக வாக்குளை வழங்கியிருந்தார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவே வடக்கு - கிழக்கில் பெரும்பான்மை பெற்றார். ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் இந்த நிலை மாறியது. தற்போது அநுர அலை குறைந்து விட்டது என்கிறார்கள் சிலர். அப்படிக்கூற முடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாக கையாண்டு நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு - நாம் வீட்டோடு என செயல்பட வேண்டும்.

எமது உளளூர் அதிகாரங்களை நாம் விட முடியாது. எனவே, நாம் இந்தத் தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்கு மிக்கவர்களை நிறுத்த வேண்டும். இதன் மூலமே அதிக வெற்றி வாய்ப்பைப் பெற முடியும். அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் எமது மாவட்ட கிளைகளுக்கு வழங்கியுள்ளோம்.

தேர்தல் முடிந்த பின்னர் ஆட்சி அமைக்கின்றபோது ஏனைய தமிழ் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சு நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், சில சபைகளின் நிலைமையை கருத்தில் கொண்டு ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் என்று தீர்மானித்துள்ளோம்.

அந்தவகையில் வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழ் அரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது. வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயல்படுவோமாக இருந்தால் பெரும்பான்மையினரிடம் அந்தப் பிரதேச சபை செல்லும் வாய்ப்புள்ளது. சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் என்று தீர்மானித்துள்ளோம்.

கொழும்பு மாநகர சபையில் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளன. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும், அதன் வேட்பாளர்களின் பின்புலம் தொடர்பாக ஆராய்வதில் பல்வேறு சவால்கள் உள்ளமையால் இம்முறை கொழும்பில் போட்டியிடுவதில்லை என்று மத்திய குழு தீர்மானித்துள்ளது - என்றார். (ஐ)

## உயிர்த்த...

எடுக்காமல் கடமைகளை தவறவிட்டதன் ஊடாக குற்றவியல் சட்டத்தின் கீழான குற்றங்களை இழைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் விசேட மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

இந்த வழக்கை விசாரணை செய்த விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் வழக்கின் பிரதிவாதிகளை விசாரணைகளுக்கு அழைக்காது 2022 பெப்ரவரி 18ஆம் திகதி பிரதிவாதிகளை விடுவித்துத் தீர்ப்பளித்தது.

நாமல் பலல்லே, ஆதித்ய பட்ட பெந்திகே மற்றும் மொஹமட் இசர்தீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழுவே இந்தத் தீர்ப்பை வழங்கியது.

மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு இந்த தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது எனவும் அதனை வலுவிழக்கச் செய்யுமாறும் கோரி சட்ட மா அதிபரால் பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மேன்முறையீட்டை பரிசீலித்த உயர் நீதிமன்றம் பிரதிவாதிகளை அழைக்காமல் அவர்களை விடுவித்தமையானது சட்டத்துக்கு முரணான விடயம் என உத்தரவிட்டது.

வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்குமாறு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றின் நீதிபதிகள் அமர்வுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதற்கமைய, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவிக்குமாறு கொழும்பு விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு உயர் நீதிமன்றத்தினால் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

## ஐக்கிய...

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் மின்சார கட்டணம் மற்றும் எரிபொருட்களின் விலைகள் தொடர்பில் கற்பனை கதைகளை கூறினார்.

கொமிஷன் மற்றும் தேவையற்ற வரிகள் காரணமாகவே எரிபொருள் விலை உயர்வடைந்துள்ளதாக தெரிவித்த அவர், ஆட்சிக்கு வந்த பின்னர் பெருந்தொகை வித்தியாசத்தில் எரிபொருள் விலையை குறைக்க முடியும் எனவும் வீறாப்பாக தெரிவித்தார். ஆனால் இந்த ஒன்றும் இன்னும் குறைக்கப்படவில்லை.

மின் கட்டணமும் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்படும் என்றார். ஆனால் அதுவும் இதுவரை நடக்கவில்லை. எரிபொருள் விலை சூத்திரத்தை நீக்கி மக்களுக்கு சாதகமான சூத்திரத்தை கொண்டு வருவோம் என்று பிரஸ்தாபித்தனர். இதுவரை புதிய சூத்திரமொன்றை அறிமுகப்படுத்தவில்லை.

ஏலவே, காணப்பட்ட சூத்திரத்தையே இவர்களும் பின்பற்றி வருகின்றனர். விலைசூத்திர விடயத்திலும் திசைகாட்டியினர் அரசியல் பேச்சுக்களையே தெரிவித்து மக்களை ஏமாற்றியுள்ளனர்.

அனைவரையும் ஒன்றிணைத்த பயணத்தையே ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்து வருகிறது. ஏனைய கட்சிகளைப் போன்று கொழும்பில் உள்ள 7 நட்சத்திர ஹோட்டல்களுக்குள் தலைவர்கள் செய்து கொள்ளும் இணக்கப்பாடுகள் எம்மிடம் இல்லை.

மக்கள் மத்தியிலே எமது இணக்கப்பாடுகள் காணப்படுகின்றன. வட்டாரங்களுக்கு நாம் சிறந்த வேட்பாளர்களை முன்னிறுத்துவோம். கட்சி பேதமின்றி சகலராலும் நேசிக்கப்படும், மதிக்கப்படும் நபரை ஐக்கிய மக்கள் சக்தி முன்னிறுத்தும் - என்றார். (ஐ)

# டிரான் அலஸ்க்கு எதிராக அநுர எதுவும் செய்யமாட்டார்!

### சம்பிக்க ரணவக்க சாடல்

கொழும்பு, மார்ச் 10

தலைமறைவாகியுள்ள தேசபந்துவின் பின்னணியில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, டிரானுக்கு எதிராக செயல்படமாட்டார். இதனால்தான் தேசபந்து தென்னக்கோன் பாதுகாக்கப்படுகிறார் - இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

வி.எப்.எஸ். விசா கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பில் டிரான் அலஸூக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. இவர்கள் அனைவரும் நண்பர்கள், இவர்களின் டீல் அரசியலை நாங்கள் நன்கு அறிவோம் என

நேற்று ஹோமகமவில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நட்டமடைந்த அரச நிறுவனங்களை இலாபமடையச் செய்த அனுபவம் எமக்குள்ளது. நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படக்கூடியவர்கள் எம்மிடம் உள்ளார்கள். ஹோமாகம பிரதேச சபையின் வருமானத்தை 100 கோடி முதல் 200 கோடி வரையில் எம்மால் அதிகரிக்க முடியும். ஆகவே பழைய அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பது இனிப் பயனற்றது என்றும் அவர் கூறினார். (ஐ)

## தையிட்டி விகாரைக்கு எதிராக இரண்டு நாட்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டம் மறுநாள் வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிறைவடையும்.

இந்தப் போராட்டத்தில் அனைத்துக் கட்சிகளையும் பொது மக்களையும் பங்கேற்குமாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

## த.தே.ம....

கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைவதற்கு இரகசிய பேச்சுகளை முன்னெடுப்பதாக அறிய வருகிறது.

எனினும், இந்தக் கூட்டணி தொடர்பில் இரு தரப் பிலும் உறுதிப்படுத்த முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மதுபான...

வரி 5.9 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான மது வரிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரமே இந்த வரி உயர்த்தப்படுகிறது.

இதேவேளை, நாட்டின் மதுபான உற்பத்தி 22 சதவீதம் அதிகரித்துள்ளது. மது பாவனை 23 சதவீதம் உயர்ந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியப்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கொழும்பில் சந்திக்கவுள்ளார். அத்துடன், தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திப்பார்.

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் மற்றும் இராஜதந்திர உறவுகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளநிலையில் இந்தியப் பிரதமரின் வருகை அமைந்துள்ளது. இதன்போது, முன்னர் செய்யப்பட்ட இரு தரப்பு ஒப்பந்தங்கள், இலங்கை - இந்திய உறவை மறுபடியும் கட்டியெழுப்புதல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிகிறது.

இலங்கை வரும் இந்தியப் பிரதமர் மோடி திருகோணமலை, அநுராதபுரத்துக்கும் செல்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கையின்...

எழுப்புவதற்கும் அதனை தக்க வைத்துக் கொள்வ தற்கும் சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு எதிரான கண்காணிப்புக்கள் மற்றும் ஒடுக்குமுறைகளை முடிவுக்கு கொண்டுவருவ துடன் சிவில் சமூக இடை வெளியை பாது காத்து உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப்படக் கூடிய எந்தவொரு நிலைமாறு கால நீதிப் பொறிமுறையும் சுயாதீனமானதாகவும் சகல தரப்பினரையும் உள்ளடக்கியதாக வும் அர்த்தமுள்ளதாகவும் பாதிக்கப் பட்ட தரப்பினரின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யக் கூடியதாகவும் அமைவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட நாம் தயாராக இருக்கிறோம்.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட்டு, பாதிக்கபட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் நிறைவடையவுள்ள நிலையில் இன்னமும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நிலையான தீர்வு கிடைக்கப்பெறவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விரக்தியடைந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் 2012ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கைக்கு எதிராக எட்டுக்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. உள்ளக பொறிமுறையின் கீழ் உரிய விசாரணை நடத்தி நீதியை வழங்குமாறு ஆரம்பத்தில் கோரப்பட்டது. பின்னர் கலப்புப் பொறிமுறையின் கீழ் நீதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தப்பட்டது. அதன் பின்னர் சர்வதேச விசாரணை நடத்துமாறு கோரப்பட்டது. ஆனால், எத்தகைய பிரேரணைகள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட போதிலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூறல் செயல்பாட்டை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

உண்மையிலேயே கொடூர யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரிழப்புகளை சந்தித்திருக்கின்றனர். அந்த மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அதற்கான உரிய பொறிமுறை நிறுவப்பட வேண்டும். ஆனால், மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் காலத்தை வீணடிப்பதற்கான செயல்பாடுகளை மேற்கொண்டனவே தவிர, இதயசுத்தியுடன் இந்த விடயத்தில் செயல்பட்டிருக்கவில்லை.

இனியாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது பொறுப்புக்கூறும் செயல்பாட்டில் இதயசுத்தியுடன் ஈடுபட வேண்டும். வெறுமனே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை ஏமாற்றி காலத்தை இழுத்தடிப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடக்கூடாது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வாக்குறுதிகளை அரசு மீறியதால் பொது மக்களுக்கு பெரும் சிரமம்!

## பாட்டலி சம்பிக்க ரணவக்க சாடல்



கொழும்பு, மார்ச் 10

**தற்போதைய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை மீறிவிட்டது. இதனால், மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் ஹோமகமவில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தற்போதைய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை மீறிவிட்டது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர்.


தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் எண்ணெய் மீதான வரிகளை நீக்குவதாக உறுதியளித்தது. ஆனால், இன்னும் அதை நிறைவேற்றவில்லை.

தற்போதைய அரசாங்கம் மின்சார கட்டணங்களை மூன்றில் ஒரு பங்கால் குறைப்பதாக உறுதியளித்து. ஆனால், இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்குவதாகக் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு இலங்கை மின்சார சபை 14 ஆயிரத்து 400 கோடி ரூபாய்க்கும் அதிகமான இலாபத்தை ஈட்டியது. இதனிடையே, அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வரி விதிக்க மாட்டோம் என்று வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபாய் வரி விதிக்கப்பட்டுள்ளது. அது இன்னும் நீக்கப்படவில்லை.

தற்போதைய அரசாங்கம் பொய்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறது. மத்திய வங்கி மோசடி சந்தேக நபரான அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும் அவர் அழைத்து வரப்படவில்லை. இதேபோல், தென்னக்கோனும் கைது செய்யப்படமாட்டார் - என்றார். (ஐ)

# சிவகார்த்திகேயன் இலங்கை வந்தார்!



கொழும்பு, மார்ச் 10

இந்தியாவின் பிரபல நடிகர் சிவகார்த்திகேயன் படப்பிடிப்புக்காக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

சுதா கொங்கரா இயக்கும் 'பராசக்தி' திரைப்படத்தின் படப்பிடிப்புக்காகவே அவர் இலங்கை வந்துள்ளார்.

தமிழ்நாட்டில் முதல் கட்டப் படப்பிடிப்புகள் நிறைவடைந்த நிலையில், அடுத்தகட்ட படப்பிடிப்பு இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்காகவே, சிவகார்த்திகேயன் மற்றும் இயக்குநர் சுதா கொங்கரா உள்ளிட்ட படக்குழு இலங்கை வருகை தந்துள்ளனர். (ஐ)

# ரூ. ஒரு கோடி பெறுமதியான பீடி இலைகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 10

ஒரு கோடி ரூபாய் பெறுமதியான பீடி இலைகளை ஏற்றிச் சென்ற லொறியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, குட்டிதூவ பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் தலாதுவ பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

நீர்கொழும்பு , குட்டிதூவ பகுதியில் சிறைச்சாலைக்கு பின்னால் உள்ள கடற்கரை அருகில் குற்றப் புலனாய்வுத் துறை பிரிவினர் லொறியை சோதனை செய்த போது சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 2,350 கிலோ பீடி இலைகள் சிக்கின. இவற்றின் சந்தைப் பெறுமதி ஒரு கோடியே 27 இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்படுகிறது.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# தான நிகழ்வில் தகராறு ஒருவர் அடித்துக் கொலை!

கொழும்பு, மார்ச் 10

தான நிகழ்வு ஒன்றில் இடம்பெற்ற தகராறில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

கேகாலை - வரக்காபொல பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த 61 வயது நபராவார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், உயிரிழந்தவர் தனது சகோதரரின் வீட்டில் நடந்த அன்ன தான நிகழ்வில் கலந்து கொண்டு வீடு திரும்பியபோது, அயல்வீட்டாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்திலேயே இவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று தெரிய வருகிறது.

மேலும், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ஹெரோயின், வாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 10

ஹெரோயின் மற்றும் வாள்களுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - அவிசாவளை பொலிஸ் அதிகாரிகள் குழு மேல் தல்துவ பகுதியில் நடத்திய சோதனையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் தல்துவ பகுதியை சேர்ந்த 34 வயது நபராவார். கைதானவரிடமிருந்து 15 கிராம் ஹெரோயின் மற்றும் இரு வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# இந்திய மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி பாம்பனில் போராட்டம்!

இராமேஸ்வரம், மார்ச் 10

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு - இராமேஸ்வரம் - பாம்பன் மீனவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள் 14 பேரைக் கைது செய்தனர்.

இராமேஸ்வரம் அருகே பாம்பன் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்கு சென்ற இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன், கைதான மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் கைதைக் கண்டித்தும் மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை இந்தியா அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால், பல நூறு படகுகள் நேற்று கரையிலேயே நிறுத்தப்பட்டிருந்தன. (ஐ)

# பெண்களுக்கு எதிரான அநீதிகளை ஒழிப்பதற்கு தேசிய வேலைத்திட்டம்!

## அரசை வலியுறுத்துகிறார் எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, மார்ச் 10

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் பாராபட்சங்களையும் அடையாளம் கண்டு கால அட்டவணையுடன் இந்த அநீதிகளை முற்றாக ஒழிப்பதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பெண்கள் சமூக மட்டத்தில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும் சூழலில் குறிகாட்டிகளைப் பார்க்கும் போது எமது நாட்டுப் பெண்கள் ஊழியர் படையணியில் குறைந்த பங்கேற்பையே ஆற்றி வருகின்றனர். இது 34 சதவீதமாகும்.

வளர்முக நாடுகளில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு 46 சதவீதத்துக்கும் அதிகமாகக் காணப்படுகின்றன. வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பது ஏன் என்பதை ஆராய வேண்டும்.

நாட்டின் பெரும்பான்மை பெண்களாக இருந்தாலும் ஆண்களை மையமாகக் கொண்ட குடும்ப ஒழுங்குகளும், கட்டமைப்புகளுமே இன்று நாட்டில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆண்களை மையமாகக் கொண்ட குடும்ப கட்டமைப்பில், பெண்களின் பக்கம் பல சமயங்களில் சுயமாக வெளிவருதற்கான வாய்ப்பு குறைந்த மட்டத்திலயே காணப்படுகின்றன.

பல சமயங்களில் எமது நாட்டில் பெண்கள் அசாதாரண சூழ்நிலைகளின் போதும், வீடுகளிலும், பணியிடங்களிலும் பலவிதமான வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பல கொண்டாட்டங்கள் நடைபெற்று வரும் இத்தருணத்தில் இதுபோன்ற ஒரு நாளில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் பாராபட்சங்களையும் அடையாளம் கண்டு கால அட்டவணையுடன் இந்த அநீதிகளை முற்றாக ஒழிப்பதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். சிவில் சமூகமும் அரசாங்கமும் இதன்பால் கூடிய கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பாலியல் குற்ற சந்தேகநபர் கைது!

கொழும்பு, மார்ச் 10

சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்ற சந்தேகநபர் 10 ஆண்டுகளுக்கு பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அநுராதபுரம் - கலேவலையில் புகையிலை தோட்டம் ஒன்றில் தலைமறைவாக இருந்த நிலையில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் - கல்கிரியாகமவை சேர்ந்த 39 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியிருந்தார். இது தொடர்பில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால், சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. இதையடுத்து அவருக்கு பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபருக்கு தேசிய அடையாள அட்டை இல்லாததால் சந்தேகநபரை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதை சாதகமாகப் பயன்படுத்தி சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org